

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், நேற்று (11.09.2025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு139, மேற்கு ஜோன்ஸ் சாலைப் பகுதியில் உள்ள மயான பூமியின் மேம்பாட்டுப் பணிகளை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வில், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் ”கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளை நேற்று (11.09.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் க.வீ.முரளிதரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ.ஜெயின், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. சுதா தனீதயாளன், டி.வி.செம்மொழி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! மல்லிகா ராமகிருஷ்ணன் எம்.சி. ஏற்பாட்டில்

# காஞ்சிபுரம் 18வது வட்டத்தில் 38 சி.சி.டி.வி. கேமராக்கள்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – ஆர்.காந்தி தொடங்கி வைக்கின்றனர்!

காஞ்சிபுரம், செப்.12-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம் 18 வது வார்டு மாமன்ற உறப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் தனது சொந்த செலவில் 18 வது வட்டத்தில் உள்ள அனைத்து வீதிகளில் 38 சி.சி. டி.வி. கேமராக்கள் பொருத் தப்பட்டுள்ளது. இக் கேமராக்களை துவக்கி வைக்கும் விழா இன்று (12.9.2025- வெள்ளிக் கிழமை) மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகின்றது.

விழாவிற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாநகரக் கழகச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கழக மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், 1 வது பகுதிக் கழகச் செயலாளர் கே.திலகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கேமராக்களை அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், ஆர்.காந்தி ஆகியோர் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந் நிகழ்ச்சியில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுத கரம்” 204 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 204 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (11.09.2025), திரு.வி.க.நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71, மாதவரம் நெடுஞ்சாலை, (கன்னபிரான் கோயில் தெரு அருகில்), பெரம்பூர், சென்னை. 2) வட்டம் 74அ, சந்திரயோகி சமாதி சாலை (போலீஸ் பூத் அருகில்), சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்





பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியா ராஜன், ப.தாய கம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம். சரவணன், பி.உதய சங்கர், இரா.வீரமணி, நா. துலுக்காணம், எம்.பெரோஸ் கான், கா. ராஜ்முகமது, திரு. வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ்.புஷ்ப ராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி. சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன், இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்து

# உடல் உறுப்பு தானம் செய்தவர்கள் பெயர்கள் கொண்ட மதிப்புச்சுவர்!

## செப்.30–இல் திறக்கப்படுகிறது! அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.9.2025) சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 139, மேற்கு ஜோன்ஸ் சாலைப் பகுதியில் உள்ள மயான பூமியின் மேம்பாட்டுப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை மாநகராட்சியில் இருக்கின்ற அனைத்து மயான கூடங்களில் குறிப்பாக எரிவாயு தகன மேடைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப சீர்படுத்தி மேம்படுத்தும் பணிகள் என்பது தொடர்ச்சியாக நடைப்பெற்று வருகின்றது. அந்தவகையில் மேற்கு சைதாப்பேட்டையில் இருக்கின்ற இரண்டு எரிவாயு தகன மேடைகள் ஏற்கேனவே புதிதாக கட்டடப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு இன்றைக்கு இருக்கின்றது. ஒவ்வொரு மாதத்திற்கும் இந்த மயானத்தை பொறுத்தவரை புதைப்பது, எரிப்பது என்கின்ற வகையில் 100 பேர் வரை உபயோகப்படுத்துகின்றனர். இந்த மயானம் பசுமைப்பகுதியாகவே இன்றைக்கு இருந்து வருகிறது. ஒட்டுமொத்தமாகவே சென்னையில் உள்ள அத்தனை மயானங்களையும் பசுமைப்பரப்பை அதிகரித்து அதில் இந்த துக்க காரியங்களுக்காக வருபவர்களுக்கு மனநிம்மதி தருகின்ற வகையில் இந்த இடங்களை தூய்மைப்படுத்துவது என்பது தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி செய்து கொண்டு வருகிறது. அந்த வகையில் சென்னையை பொறுத்த வரையில், இந்து மயான இடங்களாக இருந்தாலும் கிருஸ்துவ அடக்க இடங்களாக இருந்தாலும்,இசுலாமிய அடக்க இடங்களாக இருந்தாலும் அனைத்திலுமே பசுமை பரப்பளவை அதிகரித்து ஒவ்வொரு மயானமும் பூங்காக்களுக்கு இணையாக மாற்றும் பணிகளுக்கு பல்வேறு நடவடிக்கைகள்எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் சைதாப்பேட்டையில் இருக்கின்ற இந்த மயானம் ரூ.94.83 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மயானத்தை சுற்றி சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மற்றும் இன்டர்லாக்கிங் லாண்ட்ஸ்கேப்பிங் பணிகள், குளியல் அறை மற்றும் கழிவறை கட்டும் பணிகள் சுற்று சுவரை உயர்த்தி கட்டும் பணிகள் என்று ரூ.94.83 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. சைதாப்பேட்டையில் இந்த மயானம் என்பது பெசன்ட்நகரில் உள்ள மயானம், தியாகராயநகரில் உள்ள மயானம், வடசென்னை ஜி.கே.ராம் காலனி மயானம், அண்ணாநகர் வேலம்மாள் பகுதி மயானம் ஆகிய மயானங்கள் இருப்பதை போல சைதாப்பேட்டை மயானம் மேம்டுத்தும் பணிகளை தொடங்கி வைத்திருக்கிறோம்.

**கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொடர்பான கேள்விக்கு**

அதுதொடர்பாக சம்மந்தப்பட்ட மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அரசு மருத்துவமனைகளின் சேவையை குறைத்திட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு கேமராக்களை வைத்துக் கொண்டு திரிந்துக் கொண்டிருக்கிறார்கள். அது மிகப் பெரிய மருத்தவமனை, ஒருநாளைக்கு தினமும் 4000 பேர் வரை வரும் மருத்துவமனை. மருத்துவ பயனாளியை இறக்கி வீல் சேர் எடுத்து வர சென்றிக்கும் நேரத்தில் தனது தந்தை ஆதங்கத்தின் காரணமாக தூக்கி கொண்டு செல்கிறார். அதனை உடனே அருகில் இருப்பவர்கள் வீடியோ எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த வீடியோ மீடியாக்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. அது விசாரிக்காமல் கூட வெளியிடுகிறார்கள். ஒரு நாளைக்கு 4000 பேருக்கு சிகிச்சை வழங்க கூடிய மருத்துவமனை, அதுகுறித்து தெளிவாக சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர் அவர்கள் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மருத்துவமனை 3 சக்கரம் வாகனம் இல்லாமல் கூடவா இருக்கும். இது ஒரு பெரிய செய்தியாக மாற்றப்பட்டிருக்கிறது. எந்த ஒரு செய்தி போடுவதாக இருந்தாலும் அதற்குரிய உண்மைத் தன்மை குறித்து விசாரிக்க வேண்டும் என்று தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

**உடலுறுப்பு தானம் தொடர்பான கேள்விக்கு**

உடலுறுப்பு தானம் செய்வதில் தமிழ்நாடு உலகத்திற்கே முன்மாதியாக இருக்கின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2024 செப்டம்பர் 23ஆம் தேதி மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் வழங்கியவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் இது வரை 513 கொடையாளர்கள் உடலுறுப்பு தானம் வழங்கி இருக்கிறார்கள். அந்தவகையில் மேலும் அவர்களை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் வருகின்ற 30.09.2025 அன்று “wall of honor” என்கின்ற வகையில் இதுவரை மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்தவர்களின் பெயர்களை கல்வெட்டில் பதிய வைக்கும் பணி நிறைவுற்று திறந்து வைக்கப்படுகிறது. மேலும் அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் அமெரிக்காவிற்கும், வியட்நாமிற்கும் நடந்த போரில் உயிர்நீத்தவர்களின் பெயர்களை சுவரில் கல்வெட்டாக வைத்திருக்கிறார்கள். அதனை மாதிரியாக கொண்டு நமது மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் “wall of honor” என்கின்ற மதிப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் “wall of honor” செய்யப்படவிருக்கிறது. அந்த வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உடலுறுப்பு தானம் செய்தவர்களின் பெயர்கள் அந்தந்த மருத்துவமனைகளில் உள்ள சுவர்களில் நிலைத் திருக்கும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப். 12

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (13.09.2025 சனிக்கிழமை) காலை 10:30 மணி அளவில், காரியமங்கலம், மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.



அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) 09.09.2025 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகள் மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்தும், 2) 15.09.2025 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா குறித்தும், 3) 17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்தும், 4) “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஓட்டேரி, அனுமந்தராயர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்றார்!

சென்னை, செப்.12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (11.9.2025) சென்னை, ஓட்டேரி, அனுமந்தராயர் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமு முக்கு நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில், 100 ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களில் ஒன்றான சென்னை ஓட்டேரி, அருள்மிகு அனுமந்தராயர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள கடந்த 01.03.2024 அன்று பாலாலயம் செய்யப்பட்டது. இத்திருக்கோயில் சாலை மட்டத்திலிருந்து 4 அடி பள்ளத்தில் அமைந்திருந்ததால் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கருங்கல்லினால் புதிய கருவறை மற்றும் முன்மண்டபம் அமைக்கப்பட்டு இன்று குடமுழுக்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் மற்றும் ஏராளமான இறையன்பர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், இதுவரை 3,672 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இன்று மட்டும் 49 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன், மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, உதவி ஆணையர் திரு. க.சிவகுமார், திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி நித்யகலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99 மற்றும் 108க்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் மாநகராட்சிப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியப் பணிகள் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

### சென்னை தெற்கு மாவட்டம்,

# மதுரவாயல் தெற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, செப்.12-

மதுரவாயல் தெற்குப் பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கத்தில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் இன்று (12.09.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் வி.எம்.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்:

1. முப்பெரும் விழா
2. ஓரணியில் தமிழ்நாடு
3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் கடம்பத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட கிளைக் கழகங்களின் செயற்குழு கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன், மாவட்ட கழக அவைத் தலைவர் க.திராவிடபக்தன், கம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சரஸ்வதி சந்திரசேகர், பி.கே.நாகராஜ், வி.எஸ்.நேதாஜி, தாடி என்.நந்தகோபால், உள்ளிட்ட ஒன்றிய கழகப் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், ஏராளமான கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.